# கிறிஸ்துவின் தனித்தன்மை

கிறிஸ்து இயல்' என்பது கிறிஸ்துவை குறித்தும் அவருடைய செயலை குறித்தும் படிப்பதாகும். கிறிஸ்துவை குறித்து முழுமையாக நாம் கற்றுக்கொள்ளமுடியாது. எனினும் இந்த படிப்பானது அவரை குறித்து இன்னும் அதிகம் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலையும் அவரை குறித்து அறியும் அறிவையும் உங்களிடத்தில் தூண்டும்.

'பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் (மத் 16:13–17). நாம் கிறிஸ்துவை எப்படியாக அறிந்துகொள்கிறோம்?

'கிறிஸ்டோஸ்' மற்றும் 'லோகோஸ்' என்கிற இரண்டு கிரேக்க சொற்களின் மூலம் இணைந்து பிறக்கிற 'கிறிஸ்டாலஜி' என்கிற ஆங்கில வார்த்தையின் தமிழ் வார்த்தையே 'கிறிஸ்து இயல்' ஆகும். 'கிறிஸ்டோஸ்' என்பதற்கு கிறிஸ்து என்றும், 'லோகோஸ்' என்பதற்கு வார்த்தை என்றும் பொருள்படுவதால் இது கிறிஸ்துவை குறித்த படிப்பு என்பதாகும். உலக மனிதர்கள் கிறிஸ்துவை குறித்து என்ன கருதுகிறார்கள் என்று அல்ல; மாறாக வேதப்புத்தகம் நமக்கு என்ன கற்றுகொடுக்கிறதோ அதை மட்டுமே படிக்கப்போகிறோம்.

கிறிஸ்துவின் தனித்தன்மை

## A. <u>அவருடைய பிறப்பு தனித்தன்மை வாய்ந்தது</u>

1. <u>கிறிஸ்து பிறந்த இடம்:</u>

   அவருடைய பிறப்பு ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்டது.

   - கி.மு.650ல் வாழ்ந்த மீகா தீர்க்கதரிசி "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (5:2). என்று கிறிஸ்துவின் பிறப்பை குறித்து முன்னறிவிக்கிறார்.
   - கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்று லூக்காவில் வாசிக்கிறோம் (2:11).

இரண்டு பெத்லகேம் (யூதேயா மற்றும் கலிலேயாவில் உள்ள செபுலோன் கோத்திர பகுதி) இருந்தது, பொதுவாக பெத்லகேம் என்று சொல்லாமல் 'எப்பிராத்தா' என்றும் 'தாவீதின் ஊர்' என்றும் குறிப்பிட்டிருப்பதால் யூதேயாவில் உள்ள பெத்லகேமாகும்.

2. <u>கிறிஸ்துவின் பிறப்பின் வகை:</u>

கி.மு.700ல் வாழ்ந்த ஏசாயா: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் (ஏசாயா 7:14) என்று குறிப்பட்டபடியே அது மத்தேயுவில் நிறைவேறியது "மரியாளிடத்தில் கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்தார் (மத் 1:14) என்று வாசிக்கிறோம்.

மத்தேயு முதல் அதிகாரத்தில் எல்லோரும் பெற்றான்; பெற்றான்; பெற்றான் என்று குறிப்பிடப்படுவதால் அவர்கள் பெறப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால், கிறிஸ்து ஒருவரே பிறந்தார் என்று குறிப்பிடபட்டுள்ளதால் அவர் தானே பிறந்தவராக கருதப்படுகிறார்.

3. <u>கிறிஸ்துவின் பிறப்பின் நோக்கம்:</u>

நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்க இரட்சகராக பிறந்தார்.

- நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5).
- அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன் (ஏசாயா 53:12).
- அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான் (மத் 1:21).

**B. <u>கிறிஸ்துவின் வாழ்க்கை தனித்தன்மை வாய்ந்தது</u>**

அவர் இந்த பூவுலகில் 33 ½ வருடங்கள் மனிதனாக வாழ்ந்த நாட்களில் 3 ½ வருடங்கள் பொது வாழ்க்கையில் அதாவது ஊழியத்தில் ஈடுபட்டார். இந்த குறுகிய 3 ½ வருடங்களில் அவர் மாபெரும் காரியங்களை செய்தார்.

<u>கிறிஸ்துவின் பரிசுத்தம்</u>

அவர் தனது வாழ்க்கை முழுவதும் முழு பரிசுத்தம் நிறைந்தவராக காணப்பட்டார். உலகத்தில் எந்த மனிதனிடத்திலும் காணப்படாத பரிசுத்தமானது அவருடைய வாழ்கையில் காணப்பட்டது.

- உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும் (லூக்கா 1:35)
- யோவான்ஸ்நானகனிடத்தில் அநேகர் வந்து தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள் (மத் 3:5,6). ஆனால் கிறிஸ்துவோ பாவங்களை அறிக்கையிடவேண்டிய அவசியம் இல்லை; காரணம் அவர் பாவம் செய்யவில்லை. யோவான்ஸ்நானகன் அவரிடம் சொல்லும்போது: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான் (மத் 3:14).
- என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? (யோவான் 8:46) என்று கேட்கிறார்.

- ○ மிக பெரிய உலக தலைவர்கள் கூட பதறி சொன்ன காரியங்கள் உண்டு! தவறுகளும் உண்டு! அதற்காக அவர்கள் வருத்தம் தெரிவித்தும் இருக்கிறார்கள். ஆனால், கிறிஸ்துவோ தான் சொன்ன அல்லது செய்த காரியத்திற்காக ஒருபோதும் வருத்தம் தெரிவித்ததில்லை.
- ○ மத்தேயுவில் ஜெபிக்க கற்றுக்கொடுக்கும்போதும்கூட: எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் (6:12) என்று சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்தாரே தவிர அவர் அப்படி ஜெபித்தது இல்லை.
- ○ அவர் சிலுவையில் மரிக்கும்போதுகூட என்னை மன்னியும் என்று சொல்லாமல், பிதாவே இவர்களுக்கு மன்னியும் (லூக்கா 23:34) என்று சொன்னார்.

**அவருடைய எதிரிகள்கூட அவருடைய பரிசுத்தத்திற்கு எதிராக குற்றசாட்டு வைக்காமல் அவர் பரிசுத்தமுள்ளவர் என்றுதான் சாட்சி கொடுத்தார்கள்.**

- ➢ <u>யூதாஸ் காரியோத்து:</u> குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான் (மத் 27:4).
- ➢ <u>பிலாத்து:</u> இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே (லூக்கா 23:22)
- ➢ <u>சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்களில் ஒருவன்</u>: இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே (லூக்கா 23:41)
- ➢ <u>நூற்றுக்கு அதிபதி:</u> மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் (லூக்கா 23:47).

**அப்போஸ்தலர்கள் சொல்லும்போது...**

- ➢ <u>பவுல்:</u> பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரி 5:21)
- ➢ <u>பேதுரு:</u> அவர் பாவஞ்செய்யவில்லை (1 பேதுரு 2:22)
- ➢ <u>யோவான்:</u> அவரிடத்தில் பாவமில்லை (1 யோவான் 3:5).

**உலகத் தலைவர்கள் சொல்லும்போது ...**

- ➢ <u>நெப்போலியன் பொனபார்ட்</u> (பிரான்ஸ் நாட்டின் படைத் தலைவனாகவும், அரசியல் தலைவனாகவும் இருந்தவன்): நான் மனிதர்களை அறிவேன் ஆனால் கிறிஸ்துவோ மனிதன் அல்ல அதற்கும் மேலாக... என்று கூறினான். அதனுடைய பொருள் அவர் தெய்வம் என்பதாகும்.
- ➢ <u>ராஜாராம் மோகன்ராய்</u> (இந்தியத் தலைவர்களில் ஒருவர் – புதிய இந்தியாவை நிறுவியர் என்றும், புதிய மறுமலர்ச்சியை தொடங்கி வைத்தவர் என்றும் கூறுவர்): இயேசு சூரியனை போன்றவர் என்று கூறினார் அதன் பொருள் அவர் அப்பழுக்கற்றவர் அதாவது பரிசுத்தமானவர் என்று பொருளாகும்.
- ➢ <u>விவேகானந்தர்</u> (இந்தியத் துறவி): கிறிஸ்துவை குறித்து அனேக காரியங்களை தன்னுடைய நூலில் வெளியிட்டிருக்கிறார்.
  - ○ இயேசு நாதரை கடவுளாகத் தவிர வேறு முறையில் என்னால் வழிபட முடியாது.
  - ○ கிறிஸ்துவானவர் தொட்டவுடனே மனிதனுடைய ஆன்மாவே மாறுதலடைகின்றது. கிறிஸ்துவைப்போல அவன் மாறிவிடுவான்.
  - ○ "இயேசு கிறிஸ்துவை, மனித உருக்கொண்ட தெய்வத்தை, நாம் தெய்வமாக வணங்க வேண்டும்... உங்களுக்கு வீடுபேறு வேண்டுமானால், இயேசு கிறிஸ்துவுடன் நெருங்கிய தொடர்பினைக் கொள்ளுங்கள். ஏனெனில், உங்கள் எண்ணத்தால்

எண்ணுகிற எந்தக் கடவுளைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர் இயேசுவே. இயேசு ஒரு மனிதரே என்று நீங்கள் நினைப்பீர்களாயின், அவரை நீங்கள் வணங்க வேண்டாம். இயேசுவே கடவுள் என்ற உண்மை உங்களுக்குப் புலப்படுகின்றபோது அவரை நீங்கள் வணங்கலாம்.

எல்லாராலும் போற்றப்படும்படியாக வாழ்ந்த இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த வாழ்க்கை தனித்தன்மை வாய்ந்தது.

C. <u>அவருடைய போதனை தனித்தன்மை வாய்ந்தது</u>

இந்த உலகத்தின் போதனைகளுக்கு இயேசு கிறிஸ்துவின் போதனை முற்றிலும் வேறுபட்டது.

- அவருடைய வாயிலிருந்து கிருபையுள்ள வார்த்தைகள் புறப்பட்டது (லூக்கா 4:22)
- உலகம் இதுவரை கேட்டதிலேயே மிகச்சிறந்த போதனையாக காணப்படுவது கிறிஸ்துவின் மலை பிரசங்கம் (மத்தேயு 5, 6, 7 அதிகாரங்கள்). மலைப் பிரசங்கத்தின் இறுதியில் ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள் என்று பார்க்கிறோம்.

பழைய ஏற்பாட்டில் **'கர்த்தர் சொல்லுகிறார்'** என்ற பதமானது அனேக முறை வருகிறது. இது தேவ வல்லமையின் அத்தாட்சிக்கு அடையாளமான சொல்லாக இருக்கிறது. மோசே மற்றும் இன்னும் அனேக தீர்க்கதரிசிகளாக இருக்கட்டும் 'நான் சொல்லுகிறேன்' என்கின்ற வார்த்தையை உபயோகப்படுத்தவில்லை. புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து மட்டுமே **'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்'** என்று சொன்னார். ஆகவே, பழைய ஏற்பாட்டில் கர்த்தர் சொல்லுகிறார் என்ற வார்த்தைக்கு இணையாக நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்ற வார்த்தை அதிகாரத்தையும் வல்லமையையும் காட்டுவதால் அவருடைய போதனை தனித்தன்மை வாய்ந்தது.

**'இருக்கிறவராக இருக்கிறேன்'** (யாத் 3:14) என்று பழைய ஏற்பாட்டில் கர்த்தர் சொன்ன வார்த்தைக்கு நிகரான வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து சொன்ன **'நானே'** என்ற வார்த்தை ஆகும். 'நானே' என்பதின் கிரேக்க பதம் 'யேகோ ஏமி' என்பதாகும். இதை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பயன்படுத்தினதினால் அவருடைய போதனை தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது.

<u>கிறிஸ்து சில அசாதரணமான உரிமைக்கோரல்களை முன்வைத்தார்.</u>

- ஜீவ அப்பம் நானே (யோவான் 6:35)
- நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் (யோவான் 8:12)
- நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 11:25)
- நான் மெய்யான திராட்சச்செடி (யோவான் 15:1)
- நானே வாசல் (யோவான் 10:9)
- நானே நல்ல மேய்ப்பன் (யோவான் 10:11)
- நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 14:6)

## D. அவருடைய மரணம் தனித்தன்மை வாய்ந்தது

அவருடைய மரணம் திடீரென நடந்த விபத்தோ, தவறான தண்டனையோ அல்ல; அது தேவனுடைய திட்டத்தின்படி தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டு தேவனால் நிறைவேற்றப்பட்டதாகும்.

- இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை (ஏசாயா 53:8,9).

இரவில் கைது செய்வதோ விசாரிப்பதோ கூடாது என்பது ரோம சட்டம். ஆனால் அது அங்கு மீறப்பட்டது. ஐந்து நீதிபதிகள் ஆறு முறை விசாரித்தார்கள். பிலாத்து மூன்றுமுறை இவரிடத்தில் குற்றமில்லை என்று சொன்னான். அதற்குப்பின் அவர் சிலுவையில் அறையப்பட்டார். அதாவது ஒரு (நீதிபதி) நியாயாதிபதி தண்டிக்கப்பட்டார். இது தேவனுடைய திட்டமாகும்.

- அவருடைய மரணத்தின் போது மூன்று மணி நேரம் இருள் நிலவியது (மத் 27:45).
- தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது,பூமியும் அதிர்ந்தது கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, நித்திரை அடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது (மத் 27:51,52).

## E. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தனித்தன்மை வாய்ந்தது

கிறிஸ்து தன்னுடைய சீஷர்களுக்கு தன்னுடைய மரணத்தைக் குறித்து எப்பொழுதெல்லாம் அறிவித்தாரோ அந்த சமயங்களிலெல்லாம் தன்னுடைய உயிர்த்தெழுதலை குறித்தும் முன்னறிவித்தார்.

- திறக்கப்பட்ட கல்லறையிலே தூதன் சொல்லுகிறான் அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் (மத் 28:6).

## F. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தனித்தன்மை வாய்ந்தது

- இந்த உலகில் வாழ்ந்த எவரும் நான் திரும்ப வருவேன் என்று சொல்லவில்லை. கிறிஸ்து ஒருவரே நான் திரும்பவும் வருவேன் என்று சொல்லியிருக்கிறார். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் (யோவான் 14:2, 3).
- கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் (அப் 1:11).

திருச்சபையானது அவருடைய வருகையை எதிர்நோக்கி காத்துக்கொண்டிருக்கிறது. இது திருச்சபையின் அசைக்க முடியாத மகிமையான நம்பிக்கையாகும்.

G. **<u>கிறிஸ்துவின் மாற்றும் வல்லமை தனித்தன்மை வாய்ந்தது</u>**

சுவாமி விவேகானந்தர் கூறும்போது நூறு வாலிபர்களை என்னிடத்தில் தாருங்கள் நான் இந்த முழு உலகத்தையும் மாற்றிக்காட்டுகிறேன் என்று கூறினார். ஆனால், இயேசு கிறிஸ்து எந்த ஒரு தகுதியும் இல்லாத சாதாரண 12 மனிதர்களை தெரிந்துகொண்டு அவர்கள் மூலமாக இந்த முழு உலகத்துக்கும் நற்செய்தியை அறிவிக்க சித்தம்கொண்டார். ஆரம்ப நாட்களில் யூதேயா மற்றும் கலிலேயா பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மாற்றும் வல்லமையானது இன்றும் பரந்து விரிந்து கொண்டு செல்லுகிறது. இன்றைக்கு அது நம்முடைய கைகளில் காணப்படுகிறது.

உலகப் பிரகாரமாக அவர் வாழ்ந்த நாட்களில் தச்சராக இருந்த போது தன்னுடைய தகப்பனாருக்கு கீழ்ப்படிந்து மரங்களை கொண்டு பொருள்களை வடிவமைத்தார். ஆனால், அவருடைய ஊழிய நாட்களில் (தன்னுடைய வார்த்தையை கொண்டு) ஒரு பாவியை பரிசுத்தமாக்ககூடிய காரியத்தைச் செய்துவந்தார் அதை இன்றும் செய்து வருகிறார். ஆகவே அவருடைய மாற்றும் வல்லமை தனித்தன்மை வாய்ந்தது.